www.Padasalai.Net www.TrbTnpsc.com

VELLORE DISTRICT

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## பொருளியல்

நேரம் : 3.00 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள் : 90

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பைக் குறிப்பிடுக.
   அ) நாடுகளின் செல்வம் ஆ) பொதுக் கோட்பாடு இ) மூலதனம் ஈ) பொது நிதி
2. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி.
   அ) ஜே.எம்.கீன்ஸ் ஆ) கார்ல்மார்க்ஸ் இ) ஆடம்ஸ்மித் ஈ) J.S.மில்
3. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது
   அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
   இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31
4. GNP = ______ + வெளிநாட்டு நிகர காரணி வருமானம்.
   அ) NNP ஆ) NDP இ) GDP ஈ) தனி நபர் வருமானம்
5. மொத்த அளிப்பு சமம் ______.
   அ) C + I + G ஆ) C + S + G + (X – M) இ) C + S + T + (X – M) ஈ) C + S + T + Rf
6. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ______ ஆகும்.
   அ) வட்டி வீதம் ஆ) விளைவுத் தேவை இ) தொகு தேவை ஈ) தொகு அளிப்பு
7. இறுதி நிலை நுகர்வு விடுப்பு =
   அ) மொத்த செலவு / மொத்த நுகர்வு ஆ) மொத்த நுகர்வு / மொத்த வருவாய்
   இ) நுகர்வு மாற்றம் / வருவாய் மாற்றம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
8. கீன்ஸின் கருத்துப்படி முதலீடு MEC ஐயும் ______ சார்ந்தது.
   அ) தேவையையும் ஆ) அளிப்பையும் இ) வருவாயையும் ஈ) வட்டி வீதத்தையும்
9. MV என்பது
   அ) பணத்தேவை ஆ) சட்டப்பூர்வ பண அளிப்பு
   இ) வங்கிப் பண அளிப்பு ஈ) மொத்த பண அளிப்பு
10. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
    அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு
    இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி
11. ஏற்றுமதி நிகரம் என்பது
    அ) ஏற்றுமதி X இறக்குமதி ஆ) ஏற்றுமதி + இறக்குமதி
    இ) ஏற்றுமதி – இறக்குமதி ஈ) பணிகள் ஏற்றுமதி
12. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்
    அ) புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ) புலனாகாத பணிகள்
    இ) (அ) மற்றும் (ஆ) ஈ) பண்ட வாணிபம் மட்டும்
13. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு
    அ) 1965 ஆ) 1967 இ) 1972 ஈ) 1997
14. பற்றாக்குறை வரவு செலவுத்திட்டம் என்பதன் பொருளாவது
    அ) அரசின் செலவை விட வருவாய் அதிகம்
    ஆ) அரசின் நடப்புக்கணக்குச் செலவு நடப்புக் கணக்கு வருவாயை விட அதிகம்
    இ) அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயை விட அதிகம்
    ஈ) மேலே கூறியவற்றில் எதுவுமில்லை
15. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை ______.
    அ) சந்தைப் பொருட்கள் ஆ) சந்தையிடாப் பொருட்கள்
    இ) இரண்டும் ஈ) இவற்றில் எதுவுமில்லை
16. அமிலமழை ______ விளைவுகளில் ஒன்று.
    அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நில மாசு ஈ) ஒலி மாசு
17. பொருளாதார வளர்ச்சி ______ ஐ அளவிடுகிறது.
    அ) உற்பத்தித்திறன் வளர்ச்சி ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு
    இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை எதுவுமில்லை

Scanned with CamS

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு
அ) பிரான்ஸ் ஆ) ஜெர்மனி இ) இத்தாலி ஈ) ரஷ்யா
19. "ஸ்டாட்டிஸ்டிக்ஸ்" (Statistics) என்ற வார்த்தை ______ ஆகும்.
அ) ஒருமை ஆ) பன்மை இ) ஒருமை மற்றும் பன்மை ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை
20. உடன் தொடர்புக்கெழு Y-ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும்?
அ) 0 மற்றும் 1 ஆ) –1 மற்றும் 0 இ) –1 மற்றும் +1 ஈ) –0.5 மற்றும் +0.5

பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?
22. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுய நுகர்வு" எவ்வாறு சிரமத்தைத் தருகிறது?
23. "விளைவுத் தேவை" என்றால் என்ன?
24. இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) - வரையறு.
25. தேக்க வீக்கம் என்றால் என்ன?
26. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.
27. செலாவாணி மாற்று வீதம் என்றால் என்ன?
28. மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?
29. ஒட்டுறவு என்பதை வரையறு.
30. உலக வெப்பமயமாதல் என்பதை வரையறு.

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக.
32. காரணி செலவில் NNP - குறிப்பு தருக.
33. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளை கூறு.
34. மிகைப் பெருக்கி - விளக்குக.
35. பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
36. இந்திய தொழில் நிதிக்கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.
37. மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள்தருக.
38. ஐ.எம்.எப். (IMF) கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
39. பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக.
40. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துக்களை விவரி.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக. *(அல்லது)*
ஆ) தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.
42. அ) பணத்தின் பணிகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விளக்குக.
43. அ) நிதிக் கொள்கையின் கருவிகள் எவை? விளக்குக. *(அல்லது)*
ஆ) பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.
44. அ) பொருளாதார ஆய்வில் சமூக கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி. *(அல்லது)*
ஆ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.
45. அ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக. *(அல்லது)*
ஆ) இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ-ன் பங்கினை விவாதிக்க.
46. அ) புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக. *(அல்லது)*
ஆ) ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி.
47. அ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினைக் கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

*********

Scanned with CamSc
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

12TH பொருளியல் விடைக் குறிப்பு

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025
# வேலூர் மாவட்டம்
## prepared by

**Dr. C.SUDHAKAR M.A.,M.Phil.,B.Ed.,SET.,Ph.D.,**
**GBHSS USSOOR**

**Mr. K.SUDHAKAR M.A.,B.Ed.,**
**GHSS PANAMADANGI**

| | | | |
|---|---|---|---|
| **1** | ஆ) பொதுக் கோட்பாடு | **11** | இ) ஏற்றுமதி – இறக்குமதி |
| **2** | ஆ) காரல் மார்க்ஸ் | **12** | இ) அ மற்றும் ஆ |
| **3** | அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 | **13** | ஆ) 1967 |
| **4** | இ) GDP | **14** | இ) அரசின் மொத்தச்செலவு மொத்த வருவாயைவிட அதிகம் |
| **5** | ஈ.) $C+S+T+R_f$ | **15** | ஆ) சந்தையிடா பொருட்கள் |
| **6** | அ.) வட்டி வீதம் | **16** | அ) காற்று மாசு |
| **7** | இ) நுகர்வு மாற்றம் / வருமானம் மாற்றம் | **17** | இ) உற்பத்தி அதிகரிப்பு |
| **8** | ஈ) வட்டி வீதத்தையும் | **18** | அ) பிரான்சு |
| **9** | ஆ) சட்டப்பூர்வமான பண அளிப்பு | **19** | இ) ஒருமை மற்றும் பன்மை |
| **10** | ஈ) இந்திய ரிசர்வ் வங்கி | **20** | இ) -1 மற்றும் 1 |

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| வினா எண் | விடை | மதிப் பெண் |
|---|---|---|
| 21 | ஒரு பொருளாதார அமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறையை குறிப்பதாகும். | 2 |
| 22 | விவசாயிகள் தங்களின் சுயநலத்திற்காக உற்பத்தி பொருளை ஒதுக்கி வைக்கின்றனர் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது | 2 |
| 23 | விளைவு தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கின்ற பணத்தின் அளவு ஆகும். எனவே விளைவு தேவை தேசிய வருவாய்க்கு சமமாக இருக்கும் | 2 |
| 24 | இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தை அறிய சேமிப்பு மாற்றத்தை வருமான மாற்றத்தினால் வகுத்தால் கிடைக்கும். **$MPS = \Delta S / \Delta Y$** | 2 |
| 25 | பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும் வேலையின்மையும் அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும் | 2 |
| 26 | மைய வங்கி பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப் பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கை எனப்படுகிறது. | 2 |
| 27 | ஓர் அலகு அயல்நாட்டு பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டு பணத்தை கொடுக்கிறோம் என்பதே பணமாற்று வீதமாகும். | 2 |
| 28 | ஒரு நாட்டின் எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்புடன் வெளிநாட்டு வருமானத்தின் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி எனலாம். | 2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 29 | ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கு இடையே உள்ள உறவை விளக்குகிறது. | 2 |
| 30 | உலகின் சராசரி வெப்பநிலை அதிகரித்து வருவது உலக வெப்பமயமாதல் எனப்படுகிறது. | 2 |

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: வினா எண் 40- க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| வினா எண் | விடை | மதிப் பெண் |
|---|---|---|
| 31 | **முதலாளித்துவம்**<br>1. தனியார் உரிமை.<br>2. இலாப நோக்கம்<br>3. வருவாய் பங்கீடு சமமற்ற நிலையில் இருக்கும்.<br><br>**சமத்துவம்**<br>1. பொது அல்லது அரசு உரிமை<br>2. சமூக நலன்<br>3. வருவாய் பங்கீடு சமநிலையில் இருக்கும் | 3 |
| 32 | 1. NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.<br>2. NNP FC = NNP MP - மறைமுக வரி + மானியம். | 3 |
| 33 | ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே தேவை எனப்படும். அதன் கூறுகள்<br>1. c = நுகர்வுத் தேவை 2. I = முதலீட்டுத் தேவை 3. G = அரசு செலவு 4. X - M = நிகர ஏற்றுமதி<br>AD = C + I + G +( X - M ) | 3 |
| 34 | மிகைப் பெருக்கி எளிய பெருக்கியை விட சிறந்தது. ஏனெனில் எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும். ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும். | 3 |
| 35 | 1. ரொக்க வைப்பு விகிதம் ( CDR )<br>2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம் ( RDR )<br>3. ரொக்க இருப்பு விகிதம் ( CRR )<br>4. சட்டப்பூர்வ நீர்மை விகிதம் ( SLR ) | 3 |
| 36 | 1. இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட கால கடன்களை வழங்குகிறது.<br>2. ஏற்றுமதி இறக்குமதி பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது.<br>3. கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.<br>4. சம உரிமை பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குகிறது. | 3 |
| 37 | அந்நியச் செலாவணி சந்தையில் வெளிநாட்டு பணத்திற்கான தேவையும், அளிப்பும் பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பண மாற்று வீதம் என்று அழைக்கலாம். | 3 |
| 38 | 1. **அடிப்படை கடன் வசதி:** உறுப்பு நாடுகள் தற்காலிக அயல்நாட்டு செலுத்து நிலை சமமின்மை பிரச்சனையில் விடுபட இந்த வகை கடன் வசதி.<br>2. **விரிவாக்கப்பட்ட நிதி வசதி:** அடிப்படை கடன் தொகைக்கு மேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே இந்த வகை கடன் வசதி.<br>3. **தாங்கி இருப்பு வசதி:** தாங்கிருப்பு நிதி வசதி 1969-ல் துவங்கப்பட்டது. உணவுப் பொருள் விலை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வழங்கப்படும் கடன் வசதி. | 3 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 39 | 1. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R . V . அய்யர்ஸ் "பொருள் சார் சமநிலை அணுகுமுறை" வகுத்தளித்துள்ளனர்.<br>2. பொருள் சார் சமநிலை அணுகுமுறை மாதிரியில் மொத்த பொருளியல் செயல்பாடுகள் உள்ளீடு, வெளியீடு ஆகியவற்றுக்கிடையே சமமான ஓட்டமாக உள்ளது. | 3 |
| 40 | 1. நாட்டின் சந்தைகளின் இயக்கத்தை முடிக்கிவிடுதலும் உறுதியாக்குதலும்.<br>2. வேலையின்மையை அகற்றுதல்.<br>3. சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல். | 3 |

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 **x** 5 = 35

| வினா எண் | விடை | | | | | மதிப் பெண் |
|---|---|---|---|---|---|---|
| 41. அ. | வ. எண் | **தன்மைகள்** | **முதலாளித்துவம்** | **சமத்துவம்** | **கலப்புத்துவம்** | 5 |
| | 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை | |
| | 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் | |
| | 3 | மைய பிரச்சினைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை | |
| | 4 | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு | |
| | 5 | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை | |
| | 6 | பொருளாதார சுதந்திரம் | சமனற்ற நிலை | சுதந்திரமின்மை | கட்டுப்பாடுடன் சுதந்திரம் | |
| | 7 | முக்கிய பிரச்சினை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை | |

www.Padasalai.Net

| ஆ. | கீன்ஸ் கோட்பாடு | தொன்மை கோட்பாடு | |
|---|---|---|---|
| | 1. குறுகிய கால சமநிலை<br>2. பணம் பரிவர்த்தனைக்கும் சேமிக்கவும் உதவும்<br>3. அரசின் தலையீடு அதிகம்<br>4. குறை வேலை வாய்ப்பு நிலவும்<br>5. பற்றாக்குறை வரவு-செலவு அறிக்கை சிறந்தது<br>6. வட்டி வீதம் மாறும்<br>7. தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது<br>8. சேமிப்பு கெடுதல்<br>9. பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு பேரியல் அணுகுமுறை | 1. நீண்டகால சமநிலை<br>2. பணம் பரிவர்த்தனைக்கு மட்டும் உதவும்<br>3. அரசின் தலையீடு குறைவு<br>4. முழு வேலை வாய்ப்பு நிலவும்<br>5. உபரி-வரவு செலவு அறிக்கை சிறந்தது<br>6. வட்டி வீதம் மாறாது<br>7. அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்<br>8. சேமிப்பு நல்லது<br>9. பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நுண்ணின அணுகுமுறை | 5 |
| 42.<br>அ. | 1. பணம் ஒரு பரிவர்தனை கருவி.<br>2. பணம் ஒரு மதிப்பின் அளவுகோல்.<br>3. பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலன்.<br>4. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை.<br>5. கடன் முறைக்கு அடிப்படை.<br>6. தேசிய வருவாயை பகிர்ந்தளிக்க உதவுகிறது.<br>7. இறுதிநிலை பயன்பாடுகளை ஒப்பிட பணம் பயன்படுகிறது.<br>8. திரும்ப செலுத்தும் திறனை தக்க வைக்க பணம் உதவுகிறது.<br>9. பணம் வாங்கும் திறனை குறிக்கிறது. | | 5 |
| ஆ. | 1. **சூழற்சி சமனற்ற நிலை:** வாணிப சுழற்சியின் விளைவாக அயல்நாட்டு செலுத்து சமநிலையை இவை குறிக்கும்.<br>2. **நீண்டகால சமனற்ற நிலை:** நாடுகள் பொருளாதார வளர்ச்சி நிலையில் முன்னேறும் பொழுது நீண்டகால தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும்.<br>3. **கட்டமைப்பு சமனற்ற நிலை:** நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை இவை குறிக்கும். | | 5 |
| 43.<br>அ. | 1. **வரி விதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. இது நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும்.<br>2. **பொதுச் செலவு:** பொதுச் செலவு பணியாளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது.<br>3. **பொதுக்கடன்:** அரசு, கடன் மூலமாக பொதுமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது. | | 5 |
| ஆ. | 1. **இயற்கை வளங்கள்:** ஒரு நாட்டின் இயற்கை வளங்கள் பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும்.<br>2. **மூலதன உருவாக்கம்:** மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்து செயல்பாட்டிற்கும் அடிப்படையாகும்.<br>3. **சந்தை அளவு:** நாட்டின் பெரிய அளவிலான சந்தை கூடுதல் உற்பத்தியைத் தூண்டி பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகிறது.<br>4. **பன்னாட்டு வாணிகம்:** பன்னாட்டு வாணிகத்தின் சாதகமான நிலை பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.<br>5. **பொருளாதார அமைப்பு முறை:** ஒரு நாட்டின் தடையில்லா பொருளாதார | | 5 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | கொள்கையினால் வேகமான வளர்ச்சியை பெற முடிகிறது.<br>6. **கட்டமைப்பு மாற்றம்:** அனைத்து துறைகளுக்கான கட்டமைப்பு மாற்றம் பொருளாதார முன்னேற்றத்தை தூண்டும்.<br>7. **நிதியியல் முறை:** நாட்டின் ஒழுங்குபடுத்தப்பட்ட வங்கியியல், மூலதன ஆக்கத்தை ஏற்படுத்தி பொருளாதார முன்னேற்றத்தை அடைய செய்யும். | |
| **44. அ.** | 1. சமூக கணக்கிடுதல் மூலமாகவும் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.<br>2. சமூக கணக்கிடுதல் முறையில் நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு மற்றும் இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளும் கண்டறியப்படுகின்றன.<br>3. சமூகக் கணக்கிடுதலை தயாரிப்பது பொருளியல் அறிஞர்களுக்கு கொள்கைகளை உருவாக்க பயனுள்ளதாக இருக்கும்.<br>4. பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை விளக்குகிறது.<br>5. எதிர்கால பொருளாதார நிலையை துல்லியமாக கணிப்பதற்கும் உதவுகிறது | 5 |
| **ஆ.** | பெருக்கி : தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும், முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். **$K = \Delta Y / \Delta I$**<br>**எடுகோள்கள்:**<br>1. தூண்டப்பட்ட முதலீடு இல்லை<br>2. MPC நிலையாக இருக்கும்<br>3. பெருக்கியின் செயல்பாட்டில் கால இடைவெளி இல்லை<br>4. நாடு மூடிய பொருளாதாரமாகும்<br>5. விலையில் மாற்றம் இல்லை<br>6. முழு வேலை வாய்ப்பு நிலவுகிறது<br>7. நுகர்வு நாட்டம் வருமானத்தை சார்ந்து அமையும்<br>8. தன்னிச்சையான முதலீட்டில் மாற்றம் இல்லை<br>**பெருக்கி செயல்படும் விதம்:**<br>1. அரசு ₹100 கோடி பொது பணிக்காக கூலி, இதர பொருட்கள் வாங்குவதற்காக செலவிடுகிறது எனக் கொள்வோம்.<br>2. இந்த ₹100 கோடி உழைப்பாளர்களுக்கும் பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும்.<br>3. இங்கு MPC 0.8(80%) எனக் கொண்டால் ரூபாய் ₹80 கோடியை நுகர்வு செலவுக்கும் மீதம் ரூபாய் ₹20 கோடியை சேமிக்கவும் செய்வர்.<br>4. இதில் மேற்காண் வருமானம் பெற்றவர்களின் MPC 0.8 எனில் ரூபாய் ₹80 கோடி, ₹64 கோடி நுகர்வு செலவுக்கும் மீதம் ரூபாய் ₹16 கோடியை சேமிக்கவும் செய்வர்.<br>5. இந்த வழியில் நுகர்வு செலவானது ஒரு சங்கிலித் தொடர் போன்று சென்று கொண்டே இருக்கும். | 5 |
| **45. அ.** | 1. **பணத்தின் நடுநிலைத் தன்மை** : பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும்.<br>2. **விகித நிலைத்தன்மை** : பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மை ஏற்படுவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.<br>3. **விலையை நிலையாக இருக்கச் செய்தல்** : விலையில் நிலைத்தன்மை மிதமான விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும்.<br>4. **முழு வேலைவாய்ப்பு நிலையை அடைதல்** : 1936-ல் கீன்சின் வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொது கோட்பாடு என்ற நூல் முழு வேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைபடுத்தியது. | 5 |

www.Padasalai.Net

5. **பொருளாதார வளர்ச்சி :** நீடித்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.
6. **செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரித்தல் :** உலகப் போருக்குப் பின்னர் வாணிப சமனற்ற நிலை தோன்றின. இது பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோளை அடையும் திறனை குறைக்கும்.

**ஆ.**

1. இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் இடுபொருட்கள் உதிரிபாகங்கள் மற்றும் இயந்திரங்கள் இந்தியாவுக்கு குறைவான விலையில் அதிகமாக கிடைத்துள்ளது.
2. தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பல நாடுகளில் இந்தியா பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது.
3. குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.
4. புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.
5. பரந்த சந்தையில் இந்திய ஏற்றுமதியாளர்கள் பயனடைகின்றனர்.

5

**46. அ.**

**புற விளைவுகள் விளக்கம்:** தனி நபர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கு பெறாத சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு.

**வகைபாடுகள்:**

1. நேர்மறை நுகர்ச்சிப் புற விளைவு - அனைவருக்கும் பாதுகாப்பு.
2. எதிர்மறை நுகர்ச்சிப் புற விளைவு - ஒலிபெருக்கி ஒலி மாசு.
3. நேர்மறை உற்பத்தி புற விளைவு - தேனி வளர்ப்பு மகரந்தச் சேர்க்கை.
4. எதிர்மறை உற்பத்தி புற விளைவு - ஆலைக் கழிவு காற்று மாசு

5


**ஆ.**

ஒருநாடு குறைந்த ஒப்புமை செலவில் ஒரு பொருளை உற்பத்தி செய்யுமானால் அந்த நாடு பன்னாட்டு வாணிபத்தின் மூலம் பலனடைய முடியும் என்கிறார்.

**டேவிட் ரிக்கார்டோ**

**II . எடுகோள்கள்**

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றன
2. கூலி செலவு மட்டும் உற்பத்தி செலவாகும்.
3. நிறைவு போட்டி நிலவுகிறது
4. அரசு தலையிடுவதில்லை




**III . எடுத்துக்காட்டு விளக்கம்.**

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டை கோதுமை = 1.2 மீ.துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டை கோதுமை = 0.88 மீ.துணி |

**IV . விளக்கம்**

1. இந்தியாவுக்கு கோதுமை உற்பத்தியில் ஒப்பிட்டு செலவு சாதகமாக உள்ளது.
2. அமெரிக்காவுக்கு துணி உற்பத்தியில் ஒப்பிட்டு செலவு சாதகமாக உள்ளது. எனவே இந்தியா கோதுமையை ஏற்றுமதி செய்து துணியை இறக்குமதி செய்யலாம். அமெரிக்கா துணியை ஏற்றுமதி செய்து கோதுமையை இறக்குமதி செய்யலாம்.

5

**47. அ.**

1. **பொது வருவாய்:** அரசின் வரி மற்றும் வரி இல்லா வருமானங்கள் பற்றியது.
2. **பொதுச் செலவு:** அரசின் செலவு பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் பொது செலவை கட்டுப்படுத்துதல் பற்றியது.
3. **பொதுக்கடன்:** அரசு கடன் மூலமாக பொதுமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது
4. **நிதி நிர்வாகம்:** அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றியது.
5. **நிதிக்கொள்கை:** வரிகள், மானியங்கள், பொதுக் கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவைகள் நிதிக்கொள்கையின் கருவிகளாகும்.

5

**ஆ.**

| தேவை (**X**) | விற்பனை (**Y**) | dx(A=31) X-A (**X**-31) | dy(B = 26) Y-B (**Y**-26) | $d_x^2$ | $d_y^2$ | $d_xd_y$ |
|---|---|---|---|---|---|---|
| 23 | 18 | -8 | -8 | 64 | 64 | 64 |
| 27 | 22 | -4 | -4 | 16 | 16 | 16 |
| 28 | 23 | -3 | -3 | 9 | 9 | 9 |
| 29 | 24 | -2 | -2 | 4 | 4 | 4 |
| 30 | 25 | -1 | -1 | 1 | 1 | 1 |
| 31 | 26 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 28 | 2 | 2 | 4 | 4 | 4 |
| 35 | 29 | 4 | 3 | 16 | 9 | 12 |
| 36 | 30 | 5 | 4 | 25 | 16 | 20 |
| 39 | 32 | 8 | 6 | 64 | 36 | 48 |
| **ΣX = 311** | **ΣY = 257** | **Σ(X-A) = 1** | **Σ(Y-B) = -3** | **$\Sigma dx^2 = 203$** | **$\Sigma dy^2 = 159$** | **Σdxdy = 178** |

$$\overline{X} = \frac{\Sigma X}{N} = \frac{311}{10} = 31\frac{1}{10},$$

$\boxed{A = 31}$ X − A ⇒ 31

$$\overline{Y} = \frac{\Sigma Y}{N} = \frac{257}{10} = 25\frac{7}{10},$$

$\boxed{B = 26}$ Y − B ⇒ 26

$N = 10,\ \Sigma X = 311, \Sigma Y = 257$

$\Sigma dx = (\Sigma X - A) = 1, \Sigma dy = (\Sigma Y - B) = -3,$

$\Sigma dx^2 = 203, \Sigma dy^2 = 159, \Sigma dxdy = 178$

$$r = \frac{N\Sigma dxdy - (\Sigma dx)(\Sigma dy)}{\sqrt{N\Sigma dx^2 - (\Sigma dx)^2}\sqrt{N\Sigma dy^2 - (\Sigma dy)^2}}$$

$$= \frac{10\times178 - (1)(-3)}{\sqrt{10\times203 - (1)^2}\sqrt{10\times159 - (-3)^2}}$$

$$= \frac{1780+3}{\sqrt{2030-1}\sqrt{1590-9}} = \frac{1783}{\sqrt{2029}\sqrt{1581}}$$

$$= \frac{1783}{(45.044)(39.761)} = \frac{1783}{1790.94}$$

$\boxed{\therefore r = 0.9955}$

5

www.Padasalai.Net